# திருவத்திபுரம் நகராட்சி

## அம்மா உணவகம்

திருவத்திபுரம் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாகும். இந்நகரம் 10.76 ச.சி.மீ.பரப்பளவும் 27 வார்டுகளை உள்ளடக்கியதாக உள்ளது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி மொத்த மக்கள் தொகை 37771 ஆகும். மக்கள் தொகை பெருகிவரும் காலக்கட்டத்தில் ஏழை எளியோர்கள் பயன்படும் வகையில் இந்நகராட்சியின் காந்திசாலை மார்கெட் அருகில் அம்மா உணவகம் ரூ.25.00 இலட்சத்தில் கட்டப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அம்மா உணவகத்திற்கு சமையல் பாத்திரங்கள் Steel Boiler, Rice Vessel, Idly Plant மற்றும் இதர உபகரணங்கள் வாங்கிட தலா ரூ.8.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.118 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மா.ந.2) நாள் 26.09.2014 ன் படி அம்மா உணவகங்களில் நாளொன்றுக்கு 300 நபர்கள் பயனடையும் வகையில் தீட்டமிடப்பட்டுள்ளது. காலையில் இட்லி ரூ.1/- க்கும் மதியம் சாம்பார் சாதம் ரூ.5/- க்கும் மற்றும் தயிர் சாதம் ரூ.3/- க்கும் விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கிடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 24.05.2015 அன்று காணொலி மூலம் திறப்பு விழா செய்யப்பட்டு தற்போது பொதுமக்கள் பயனடைந்து வருகின்றனர் என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.